விஜயபாரதம்
மின்னனுஇ தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 5 புதன் 21.07.2021 மலர் - 2, இதழ் - 106

# சென்னையில் மின்சார பேருந்து



விஜயபாரதம்

நாற்பது லட்சத்துக்கு மேல் மக்கள் தொகை உள்ள சென்னை, பெங்களூரு, மும்பை, புனே, டெல்லி, ஐதராபாத், அகமதாபாத், சூரத், கொல்கட்டா என ஒன்பது நகரங்களில் மின்சாரபேருந்துகளை இயக்க, மத்திய அரசின் 'எனர்ஜி எபிஷியன்சி' நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. எனர்ஜி எபிஷியன்சி நிறுவனம், தமிழக அரசுடன் இணைந்து, சென்னையில் இந்த மின்சார பேருந்துகளை இயக்க திட்டமிட்டுள்ளது. தமிழக அரசு அனுமதிக்கும் வழித்தடத்தில், எனர்ஜி எபிஷியன்சி நிறுவனம் மின்சார பேருந்துகளை இயக்கும். பயணச்சீட்டு கட்டணம், வருவாய் பங்கீடு உள்ளிட்டவை தொடர்பாக, அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுகளில் முடிவு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடமாடும் சிகிச்சை வாகனம்



விஜயபாரதம்

திருவள்ளூர் ஒன்றிய அலுவலகத்தில் பொது சுகாதாரம், நோய் தடுப்பு மருத்துவத் துறை சார்பில், நடமாட முடியாமல் படுக்கையில் உள்ள நோயாளிகளின் வீடுகளுக்கு நடமாடும் வாகனம் மூலம் சென்று நேரடி சிகிச்சை அளிக்கும் திட்டம் திருவள்ளூரில் துவக்கப்பட்டுள்ளது. இதனை அமைச்சர் நாசர் துவக்கி வைத்தார். முதற்கட்டமாக, மீஞ்சூர், கடம்பத்தூர், பூவிருந்தவல்லி, எல்லாபுரம், பள்ளிப்பட்டு ஆகிய ஒன்றியங்களில் தலா ஒரு வாகனம் என ஐந்து வாகனங்கள் விடப்பட்டுள்ளன. ஒரு வாகனத்தில், ஒரு மருத்துவர், இரண்டு செவிலியர்கள் இருப்பர். இச்சிகிச்சை பெற 1800 599 7626 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை அழைக்கலாம் அல்லது 98403 27626 என்ற அலைபேசி எண்ணுக்கு ஒரு வாட்ஸ் ஆப் தகவல் அனுப்பினால் போதும். மருத்துவர்கள் வீட்டிற்கேவந்து சிகிச்சை அளிப்பார்கள்.

# மரியம் ரஷீதா வெளியிட்ட ஆவணம்



விஜயபாரதம்

இஸ்ரோவின் முன்னாள் தலைவர் நம்பி நாராயணனும் அவரது சகாக்களும் கிரையோஜெனிக் தொழில்நுட்பத்தை தாமதித்தனர், உளவு பார்த்தனர் என காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பழி சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பிறகு நடந்த சி.பி.ஐ விசாரணையில் அவர் மீது குற்றம் இல்லை என நிரூபிக்கப்பட்டது. அது குறித்த, ஒரு புதிய தகவல் தற்போது வெளியாகியுள்ளது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான மரியம் ரஷீதா, கிரையோஜெனிக் தொழில்நுட்பத்தை உருவாக்கும் அணியில் நம்பி நாராயணன் சேர்க்கப்படவில்லை என்பதைக் காட்டும் ஆவணங்களை வெளியிட்டுள்ளார். மேலும் அந்த ஆவணத்தில், முஹம்மது முஸ்லிம் என்பவரை அந்த குழுவில் சேர்க்க ஏதுவாக அணிக்குத் தலைமை தாங்கிய விஞ்ஞானிகளான ஆர். கருணாநிதி மற்றும் கே. லட்சுமி நாராயணா ஆகியோர் மாற்றப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலும் வெளியாகியுள்ளது.

# சி.எஸ்.ஐ. நிதி முறைகேடு மோதல்



விஜயபாரதம்

கோயம்புத்தூரில் உள்ள சர்ச் ஆப் சௌத் இந்தியா (சி.எஸ்.ஐ) என்ற கிறிஸ்தவ அமைப்பின் கூட்டம், ரேஸ் கோர்ஸ் சாலையில் உள்ள சி.எஸ்.ஐ பிஷப் அப்பசாமி கல்லூரியில் நடைபெற்றது. இதில் அங்கு நடக்கும் நிதி முறைகேடுகள் குறித்த காரசார விவாதத்தின்போது, இரண்டு குழுவினர் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். கூட்டத்தில் இருந்து சில உறுப்பினர்கள், குழுவின் உறுப்பினரும் வழக்கறிஞருமான நேசமர்லின் மீது தாக்குதல் நடத்தினர். மைக் ஸ்டாண்டால் அவர் தாக்கப்பட்டார். இதனால் அவர் தலையில் அடிபட்டு ரத்தம் வழிந்தது. இந்த வீடியோக்கள் சமூக ஊடகங்களில் தற்போது வைரலாகி வருகிறது. நேசமர்லின், தன் மீதான தாக்குதல் குறித்து ரேஸ் கோர்ஸ் காவல் நிலையத்தில் சார்லஸ் ஜேக்கப், பரமானந்தம் உள்ளிட்ட சிலருக்கு எதிராக இது குறித்து புகார் அளித்துள்ளார்.

# கடலோர கப்பல் போக்குவரத்து



விஜயபாரதம்

நமது நாட்டின் 7,500 கி.மீ. கடலோர பகுதியில் படகு போக்குவரத்தை நடத்தும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டமான 'சாகர்மாலா திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக, மத்திய அரசு துறைகளான துறைமுகம், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சகம் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. பல வழித்தடங்களில் 'ரோ ரோ, ரோபேக்ஸ்' என்ற சரக்கு மற்றும் பயணியர் கப்பல் சேவைகளுக்கான பணிகள் ஏற்கனவே துவக்கப்பட்டுள்ளன. சுற்றுலா, சரக்கு போக்குவரத்து, தினசரி பயணம் போன்றவை இதனால் மேம்படும். தனியார் நிறுவனங்கள் இதில் ஊக்குவிக்கப்படுகின்றன. தமிழகத்தில் இந்த சேவையை துவங்குவதற்காக, சென்னை துறைமுகம் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் புதுச்சேரி, கடலூர், காரைக்கால் உள்ளிட்ட பகுதிகள் வேகமாக தயாராகி வருகின்றன. இப்பகுதிகளில் கார்கள், பயணியரை ஏற்றி செல்லும் வகையில் ரோரோ, ரோபேக்ஸ் கப்பல்கள் இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படுகிறது. தனியார் நிறுவனங்கள் இதில் பங்கேற்றால் அடுத்த 5 மாதங்களில் இப்பகுதிகளில் படகு போக்குவரத்து துவங்கிவிடும் என துறைமுக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# மின்சார வாரியம் உத்தரவு




விஜயபாரதம்

கூடுதல் காப்பு வைப்புத் தொகை குறித்த ஆய்வு கூட்டத்தில், மின் நுகர்வோரின் காப்பு வைப்புத் தொகை தற்போது கணக்கிடப்பட்டுள்ளதை விட குறைவாக இருப்பின் மீதமுள்ள தொகையை வசூலிக்கலாம். அதிகமாக இருந்தால் அதை சரிசெய்யலாம் என முடிவெடுக்கப்பட்டது. இதனால் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டுமே என்ற அச்சம் தமிழக மக்களிடம் எழுந்தது. இந்நிலையில், மின் பயன்பாட்டிற்குரிய கட்டணத்தை மட்டும் தமிழக மக்கள் செலுத்தினால் போதும். கூடுதல் காப்பு வைப்புத் தொகையை மின்சார வாரியம் வசூலிக்கக் கூடாது என மின்வாரிய தலைமை நிதிக் கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

# தி.மு.கவின் ஓட்டு வங்கி அரசியல்



விஜயபாரதம்

தி.மு.கவும் அதன் கூட்டணி கட்சியினரும் சிறுபான்மையின மக்களை பிரதானமாக வைத்தே அரசியல் செய்கின்றனர். இருந்தும், பெரும்பான்மை ஹிந்துக்கள், இதை புரிந்து கொள்ளாமல், அக்கூட்டணிக்கே ஓட்டுப் போடுகின்றனர். இதனால் அவர்கள் தேர்தலில் வெற்றி பெறுகின்றனர். துாத்துக்குடி, நெல்லை கன்னியாகுமரி மாவட்டங்களில், தி.மு.க.,வை முழுக்க முழுக்க சிறுபான்மையின கட்சியாகவே மாற்றி விட்டனர். அங்கிருக்கும் பெரும்பான்மை சமூகமான ஹிந்துக்கள், தி.மு.க., மீது கடும் அதிருப்தியில் உள்ளனர். மற்ற மாவட்டங்களிலும் இது தொடர்கிறது. அரசையும் முழுமையாக சிறுபான்மையின மக்களுக்கானது என்பது போல மாற்றி, தேவையில்லாத சர்ச்சைகளை உருவாக்கி வருகின்றனர். அவர்களின் செயல்பாடு நாட்டுக்கும், பெரும்பான்மையான ஹிந்துக்களுக்கும் எதிராக உள்ளது. எனவே, ஹிந்துக்களை பா.ஜ.க பக்கம் திருப்ப, அந்த பகுதிகளில் இருக்கும் கட்சி நிர்வாகிகள் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என, தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கடத்தப்பட்ட சிலைகள் மீட்கப்படும்



விஜயபாரதம்

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வரமுக்தீஸ்வரர், கோதண்டராமர் கோயில்களை ஆய்வு செய்த ஹிந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, 'தமிழகத்தில் உள்ள கோயில்கள், திருக்குளங்கள், தேர் உள்ளிட்டவற்றை புனரமைக்கும் பணிகள் ரூ. 100 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரமுக்தீஸ்வரர், கோதண்டராமர் கோயில், சிறுவாபுரி முருகன் கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்படும். வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட சிலைகள் விரைவில் மீட்கப்படும்; கடந்த 70 நாட்களில், ஆக்கிரமிப்பில் இருந்த 600 கோடி ரூபாய் மதிப்பிலான கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன' என தெரிவித்தார். இது குறித்து சமூக வலைத்தளங்களில் கருத்துத் தெரிவித்துள்ள நெட்டிசன்கள், 'வடபழனி கோயில் நிலம் மீட்டதாக சொல்லும் அமைச்சர், அதே கோயில் நிலத்தை மசூதிக்கு தாரை வார்க்க சம்மதித்தது ஏனோ? மீட்பதே தாரை வார்க்கத்தானோ?' என கேட்கின்றனர்.

# இயற்கையை காக்கும் ஜல்சக்தி



விஜயபாரதம்

கங்கையில் உள்ள பல மீன் இனங்களில், ஹில்சா என்ற ஒருவகை மீன்கள் மட்டுமே குறிப்பிட்ட சீசன்களில் இனப்பெருக்கத்திற்காக எதிர்நீச்சல் அடித்து தான் பிறந்த இடத்திற்கு செல்லும். இவை அதிருஷ்டத்தைத் தரும் மீன்களாகக் கருதப்பட்டன. கங்கையில் அமைக்கப்பட்ட சில அணைகள் மூலமாக அதன் மேல் நோக்கிய இடப்பெயர்வு தடைப்பட்டது. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த மீன்களை உ.பி, ஜார்கண்ட், பீகார் உள்ளிட்டப் பகுதி மக்கள் பார்த்ததே இல்லை. ஆனால், தற்போது ஜல்சக்தி அமைச்சகம் கங்கைப் படுகைக்கு அனுமதித்துள்ள புதிய 344 திட்டங்களில் ஒன்றாக மாற்றியமைக்கப்பட்ட 'பிஷ் பாஸ் கேட்' என்ற தொழில்நுட்பம் வாயிலாக தற்போது, இவ்வகை மீன்கள், தங்களின் மேல் நோக்கிய இடப்பெயர்வை மீண்டும் ஆரம்பித்துள்ளன. 30 ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வகை மீன்களை தற்போது பார்க்கமுடிகிறது என அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# பாப்புலேஷன் ஆர்மி அமைக்கும் அசாம்



விஜயபாரதம்

அசாம் சட்டசபையில் மக்கள் தொகை கட்டுப்பாடு குறித்து பேசிய அம்மாநில முதல்வர் ஹிமாந்தா பிஸ்வா சர்மா, 'மக்கள் தொகை கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பாப்புலேஷன் ஆர்மி என்ற 1000 இளைஞர்கள் கொண்ட ஒரு குழு ஏற்படுத்தப்படும். அவர்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுவார்கள். அவர்கள், பொதுமக்களுக்கு, மக்கள் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கை, அதன் அத்தியாவசியம், கருத்தடை முறைகள் போன்ற தகவல்களை மக்களுக்கு அளிப்பார்கள். ஆஷா தொழிலாளர்களின் தனிக் குழுவும் இதற்கு ஏற்படுத்தப்படும். அசாமில் சிறுபான்மை முஸ்லிம்களிடையே நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வறுமைக்கு மூல காரணம் மக்கள்தொகை பெருக்கமே. அசாமில் ஹிந்துக்களிடையே மக்கள்தொகை வளர்ச்சி 2001 முதல் 2011 வரை 10 சதவீதமாக இருந்த்து. ஆனால், அது முஸ்லிம்களிடையே 29 சதவீதமாக இருந்தது' என தெரிவித்தார். மேலும், இதில் ஒத்துழைக்க காங்கிரஸ், ஏ.ஐ.டி.யு.எப் ஆகிய கட்சிகளுக்கும் கோரிக்கை விடுத்தார்.

# பாரதத்தின் ராஜதந்திர நடவடிக்கை



விஜயபாரதம்

பயங்கரவாத நிதியுதவி கண்காணிப்புக் குழு (ஏப்.ஏ.டி.எப்), பாகிஸ்தானை தொடர்ந்து 'கிரே' பட்டியலில் வைத்துள்ளதற்கும் தொடர் கண்காணிப்பில் இருப்பதற்கும் பாரதத்தின் ராஜதந்திர நடவடிக்கையும் தொடர் அழுத்தமுமே காரணம். இதன் காரணமாகவே, பாகிஸ்தான் தனது மண்ணில் உள்ள பயங்கரவாதிகள் மீது ஒரு சில நடவடிக்கைகளையாவது எடுத்து வருகிறது என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். அண்மையில்கூட பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவி நிறுத்தம் தொடர்பாக தாங்கள் எடுத்த நடவடிக்கைகளை 'ஆறு பணிகள்' என்று ஒரு புதிய பட்டியலை ஏப்.ஏ.டி.எப் அமைப்பிடம் பாகிஸ்தான் ஒப்படைத்துள்ளது.

# புதிய கழிவகற்றி தொழில்நுட்பம்



விஜயபாரதம்

ரயிலில் தற்போது அமைக்கப்படும் பயோ டாய்லெட் என்பது விலை கூடுதலானது. மேலும் உயிரி கழிவறைகள் தொழில்நுட்பத்தால் பயணிகள் தூக்கி எறியும் பிளாஸ்டிக், துணி வகைகளை சிதைத்து அழிக்க முடியாது. இதனை செப்ரோலு பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஆர் வி கிருஷ்ணய்யா, ஓடும் ரயில்களிலிருந்து கழிவறை கழிவுகளை சேகரித்து, அவற்றை பிரித்து, பயன்படுத்தக் கூடிய பொருட்களாக மாற்றும் தொழில்நுட்பம் ஒன்றை உருவாக்கியுள்ளார். இது பயோ டாய்லெட்டைவிட ஏழு மடங்கு விலை குறைவான எளிய தொழில்நுட்பம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் மேம்பட்ட உற்பத்தி தொழில்நுட்பங்கள் திட்டத்தின் ஆதரவுடன் 'மேக் இன் இந்தியா' திட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையிலான இந்த தொழில்நுட்பம், 5 தேசிய காப்புரிமைகளைப் பெற்று தற்போது சோதனைக் கட்டத்தில் உள்ளது. இந்த தானியங்கி அமைப்புமுறை மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது. ரயில் பாதையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் சேகரிப்பான் அமைப்பு, வானொலி அதிர்வெண் அடையாள உணரி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கழிவுநீர் தொட்டி இருக்கும் இடத்திற்கு ரயில் நெருங்கும்போது மேல் மூடி திறக்கப்படும். ரயிலில் உள்ள கழிவு பொருட்கள் கழிவுநீர் தொட்டியில் விழும். ரயில் அங்கிருந்து சென்றதும் கழிவுநீர் தொட்டியின் மூடி தானாக மீண்டும் மூடிக்கொள்ளும். இதற்கான சோதனைகள் முடிவடைந்து அனுமதி பெற்றால், ரயில்வே துறைக்கு பெரிய அளவில் செலவுகள் குறையும்.

# இம்ரான்கானுக்கு எச்சரிக்கை



விஜயபாரதம்

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பில் உள்ள ஜம்மு காஷ்மிர் (பி.ஓ.ஜே.கே) பகுதியின் பிரதமர் என்று அழைக்கப்படும் ராஜா பாரூக் ஹைதர், தன் அறிக்கையில், ‘ஆக்கிரமிக்கப்பட்ட பிராந்தியத்தின் அரசியலமைப்பை இம்ரான்கான் தலைமையிலான அரசு வெட்கமின்றி இழிவுபடுத்துகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மிர் பிரதேச மக்களை தங்கள் "அடிமைகள்" என்று அவர்கள் அரசாங்கம் கருதுகிறதா? ஆக்கிரமிக்கப்பட்ட பிராந்தியத்தில் விரைவில் நடைபெற உள்ள தேர்தலில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் நேரடியாக தலையிடுவதை நிறுத்தாவிட்டால், இஸ்லாமாபாத்தில் உள்ளிருப்பு போராட்டம் நடத்துவோம் என எச்சரித்தார். இந்த அறிவிப்பு தற்போது இம்ரான்கானை கலக்கமடையச் செய்துள்ளது.

# டிரம்ப் இல்லை வியாபாரம் இல்லை



விஜயபாரதம்

அமெரிக்க பகுப்பாய்வு மற்றும் தரவு நிறுவனமான ‘காம்ஸ்கோர்’, டிஜிட்டல் செய்தித் தளங்கள் குறித்த புள்ளிவிவரங்களை சமீபத்தில் வெளியிட்டது. அதில், நியூயார்க் டைம்ஸ், தி வாஷிங்டன் போஸ்ட் உள்ளிட்ட சில முக்கிய அமெரிக்க செய்தி நிறுவனங்களின் வாசகர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. டைம்ஸ், தி அட்லாண்டிக், ஏபிசி நியூஸ் உள்ளிட்ட சில பத்திரிகைகளின் வாசகர்கள் எண்ணிக்கை பாதியாக குறைந்துவிட்டது. ஃபோர்ப்ஸ் பத்திரிகை அதன் வாசகர்களில் 60 சதவீதத்திற்கும் அதிகமாக இழந்துள்ளது. விதிவிலக்காக ‘பஃப் ஃபீட்’ என்ற செய்தி நிறுவனம் மட்டும் 7 சதவீத வாசகர்களை அதிகமாகப் பெற்றுள்ளது. முன்னாள் அமெரிக்க அதிபர் டிரம்பின் பரபரப்பான பேச்சு, அதிரடி நடவடிக்கைகள், சில சமயங்களில் வில்லங்கமான பேச்சு உள்ளிட்டவை இந்த பத்திரிகைகளுக்கு கடந்த 4 ஆண்டுகளாக பரபரப்பான செய்திகளை கொடுத்ததால் அவை நன்றாக விற்பனையாகின. அது போன்ற நடவடிக்கைகள் தற்போது இல்லாததால் அவை தங்கள் வாசகர்களை இழந்துவிட்டன. இன்னும் சொல்லப்போனால், டிரம்ப் தன் செயல்பாடுகளால், மறைமுகமாக இந்த பத்திரிகைகளை வாழவைத்தார் என்றே சொல்லலாம் என அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

# ரஷ்யாவின் ஹைபர்சோனிக் ஏவுகணை



விஜயபாரதம்

ஒலியை விட 9 மடங்கு வேகமாக செல்லக்கூடிய 'சிர்கான்' என்கிற அதிநவீன ஹைபர்சோனிக் ஏவுகணையை ரஷியா தயாரித்துள்ளது. சுமார் 1,000 கி.மீ. வரை பயணித்து இலக்கை அழிக்க கூடிய இந்த ஏவுகணையை, ரஷ்ய ஆர்க்டிக்கில் உள்ள வெள்ளைக் கடலில் நிலைநிறுத்தப்பட்டிருந்த அட்மிரல் கோர்ஷ்கோவ் போர் கப்பலில் இருந்து ஏவி ரஷ்யா வெற்றிகரமாக சோதித்தது. இந்த சிர்கான் ஏவுகணை, 350 கி.மீ. வரை சென்று அதன் இலக்கை வெற்றிகரமாக தாக்கி அழித்ததாக ரஷிய ராணுவம் தெரிவித்துள்ளது. முன்னதாக கடந்த ஆண்டு ரஷ்ய அதிபர் புதின் பிறந்தநாளின் போது சிர்கான் ஏவுகணை முதல்முறையாக சோதிக்கப்பட்டது. அப்போது அவர் "சிர்கானின் சோதனை வெற்றி, எங்கள் ராணுவப் படைகளுக்கு மட்டுமல்ல, ரஷியா முழுவதற்கும் ஒரு பெரிய நிகழ்வு" என கூறினார்.

# இழப்பை ஒப்புக்கொண்ட சீனா





விஜயபாரதம்

பாரத சீன எல்லையான கால்வான் பள்ளத்தாக்கில், நமது எல்லையை காக்க வீரதீர செயல் புரிந்த நமது ராணுவ வீரர்களில் 20 பேர் வீர மரணம் அடைந்தனர். அதனை நமது பாரதம் ஒப்புக்கொண்டது, அவர்களுக்கு உரிய மரியாதை செலுத்தியது. சீன தரப்பில் 43 பேர் இறந்ததாக நமது பாரதம் தெரிவித்தது. ரஷ்ய பத்திரிகையும் சீன வீரர்களின் கல்லறை புகைப்படத்தை வெளியிட்டு அதனை உறுதிபடுத்தியது. ஆனால், சீனாவை ஆளும் கம்யூனிச கட்சி இதனை ஒப்புக்கொள்ளவே இல்லை. பின்னர் 4 பேர் இறந்ததாகக் கூறியது. இந்நிலையில், சமீபத்தில் சீன அரசு ஊடகமான 'குளோபல் டைம்ஸ்' இறந்த தனது ராணுவ வீரர்களை குறித்து ஒரு கட்டுரை வெளியிட்டது. அதில், ஒரு சீன சிப்பாய் சென் ஹோங்ஜூன், தனது சக வீரர்களை காக்க உயிர் துறந்தார் என்றும், அவருக்கு 'எல்லையைக் காத்த நாயகன்' என்ற பட்டத்தை கம்யூனிச கட்சி வழங்கியதையும் குறிப்பிட்டது. இதன் மூலம், சீனா ஐந்தாவதாக ஒரு ராணுவ வீரர் இழப்பை உறுதி செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிபர் மாளிகை அருகே குண்டு வெடிப்பு



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள அதிபர் மாளிகையில் ஈத் தொழுகை நடைபெற்றபோது, அதன் அருகில் தலிபான் பயங்கரவாதிகள் செலுத்திய ராக்கெட் வெடிகுண்டுகள் வெடித்து சிதறியது. இந்த வெடிகுண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியிலும், தொழுகை தடையின்றி நடைபெற்றது. இதில், அதிபர் அஷ்ரப் கானியும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர், உரையாற்றிய அதிபர், ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் ஆப்கானியர்களால் தீர்மானிக்கப்படுகிறது. ஆப்கானியர்கள் தாங்கள் ஒன்றுபட்டவர்கள் என்பதை செயலில் நிரூபிக்க வேண்டும். அடுத்த மூன்று முதல் ஆறு மாதங்களுக்கு மக்களின் உறுதியான நிலைப்பாடு நிலைமையை மாற்றிவிடும். ஆப்கானியர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு தலிபான்களிடம் ஏதேனும் 'நேர்மறையான பதில்' இருக்கிறதா? என பேசினார். முந்தைய ஆண்டுகளில், ஈத் விடுமுறையின் போது தலிபான்கள் போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தனர். ஆனால் இந்த ஆண்டு அத்தகைய அறிவிப்புகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

# பள்ளி புதுமைத் தூதர் திட்டம்




விஜயபாரதம்


புதிய கல்வி கொள்கை மாணவ மாணவிகளின் கற்பனைத் திறன், சிந்தனைத் திறன், கண்டுபிடிப்புத் திறனை மேம்படுத்துவதற்கு, தொழில் முனைவோராக மாற்ற உதவும். இதில் அவர்களை மேலும் ஊக்குவிக்கும் விதமாக, ஏ.ஐ.சி.டி.இ மற்றும் சி.பி.எஸ்.இ. கல்வி அமைச்சகம் 'பள்ளி புதுமைத் தூதர் திட்டம்' என்ற ஒரு புதிய முயற்சியை முன்னெடுத்துள்ளது.

இதில் மாணவ மாணவியருக்கு வழிகாட்டும் ஆசிரியரின் பங்கு மிகவும் இன்றியமையாதது என்பதால், ஆசிரியர்களுக்கு இதற்கான பயிற்சியை கல்வி அமைச்சகம் வழங்குகிறது. புதுமை தூதர்களான ஆசிரியர்கள், தனது பள்ளியில் புதுமை கலாச்சாரத்தை உருவாக்க உதவுவது, தனது பள்ளி மட்டுமல்லாமல் அருகிலுள்ள பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல், தேசிய அளவில் நடத்தப்படும் புதுமை போட்டிகளுக்கான மதிப்பீட்டாளராக செயல்படுவது என பல விதங்களில் செயல்படலாம்.

இதில் கலந்துகொள்ள, சிக்கல் தீர்க்கும் திறன், நல்ல தொடர்புத் திறன், பகுப்பாய்வுத் திறன், புதிய யோசனைகளை வளர்ப்பதில் ஆர்வம், மாணவர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் ஆர்வம் கொண்ட ஐந்து ஆசிரியர்களை அந்தந்த பள்ளிகள் https://mic.gov.in/sia என்ற இணையதளம் மூலம் பரிந்துரைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


# வலையில் சிக்கிய மீம்கள்




82,400 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும்
வகையில், 47 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்
இன்று கையெழுத்து
Capital land, Adani, JSW உள்ளிட்ட
நிறுவனங்கள் தமிழக அரசுடன் புரிந்துணர்வு
ஒப்பந்தம் மேற்கொள்ள உள்ளன


மன்னிச்சிடு உடன் பிறப்பே...
எனக்கு வேற வழி தெரியல...!!!


ஒன்றிய அரசுவிடம் தமிழக நலனுக்காக கோரிக்கையை செயல்படுத்த எச்சரிக்கைப் போகிறேன்!
டெல்லி
ஸ்டாலின்
மத்திய அரசு எங்களது கோரிக்கையை பரிசீலனை செய்வதாக தாய் மனதுடன் ஏற்றுக் கொண்டது
தமிழ்நாடு



விஜயபாரதம்

# கோபம் எனும் ஆணி

ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும். கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்தபடி எல்லோரையும் பேசி விடுவான். ஆனால், பிறகு அவர்களிடம் வருத்தம் தெரிவித்துவிடுவான்.

நாளடைவில் அவனை பலருக்கு பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்று வழி தெரியவில்லை.

அவனுடைய அப்பா, ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார். ஒவ்வொரு முறை ஆத்திரப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்துவிட்டு, வீட்டுக்குப் பின்னால் உள்ள மரவேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும்வரை அறைந்து ஏற்றிவிடு என கூறினார்.

முதல் நாள் மட்டுமே வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்தான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே என, நாட்கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டான்.

நாளடைவில் கோபம் குறைந்து, வேலியில் ஆணி அறைவது குறைந்தது. சில நாட்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.

அப்பாவிடம் சென்று விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சி. ஆனால் அதைக் காட்டிக்கொள்ளாமல், அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு ஒரு நாள் பிடித்தது.

எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியை பார்க்கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்" என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.

மகனும் அதனை உணர்ந்து திருந்தி ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றி பெற்றான்.

பாலமுருகன்